செ.வெ.எண்:170 **செய்தி குறிப்பு** நாள்:07.03.2017

உத்தராஞ்சல் டேராடூனில் உள்ள தேசிய இந்திய இராணுவக் கல்லூரிக்கு ஜனவரி -2018-ஆம் ஆண்டிற்கு 8-ஆம் வகுப்பில் மாணவர் (சிறுவர்கள்) சேர்க்கை நடைபெறுவது தொடர்பாக தகுதியுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கு 7-ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் அல்லது 7-ஆம் வகுப்பில் படித்து முடித்த மாணவர்களாக இருக்க வேண்டும் 11½ வயதிற்கு குறையாமலும் 13 வயதினை அடையாமலும் இருக்க வேண்டும். அதாவது 02.01.2005—க்கு முன்பு அல்லது 01.07.2006-க்கு பின்பு பிறந்திருக்க கூடாது.

விண்ணப்ப படிவம் மற்றும் விளக்க கையேட்டினைப் பெற பொதுப் பிரிவினர் 550-க்கான ரூபாய்க்கான வரைவோலை விரைவு அஞ்சலில் அனுப்ப வேண்டும். 'SC, ST' பிரிவினர் 505-க்கான ரூபாய்க்கான வரைவோலை விரைவு அஞ்சலில் அனுப்ப வேண்டும். இவற்றை 'The Commandant, RIMC, Dehradun, Drawee Branch. (State Bank of India, TEL Bhavan, Dehradun. (Bank Code.01576) Uttarakhand'. என்ற முகவரியில் பெற வேண்டும். முகவரியானது தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான எழுத்து மூலமோ ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில் அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் தொடர்பு எண்ணுடன் எழுத வேண்டும்.

RIMC -ல் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் பெற தி கமாண்டன்ட், ராஷ்ட்ரிய பாரதீய செய்னா காலேஜ், ராஷ்ட்ரிய இந்தியன் மிலிட்டரி கல்லூரி, டேராடூன், கான்ட், உத்ராஞ்சல் -248 003 என்ற முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31.03.2017 தேதிக்குள் The Controller of Examinations, TNPSC, Chennai -3 க்கு அனுப்ப வேண்டும்.

எழுத்து தேர்வு தேதிகள்: 01.06.2017 மற்றும் 02.06.2017

இது பற்றிய மேலும் விபரங்களுக்கு www.rimc.org என்ற இணையதளத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம் என முன்னாள் படை வீரர் நல உதவி இயக்குநர் திரு.என்.ராஜேந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்

Assistant Director
Ex-Servicemen's Welfare
Kanniyakumari at
Nagercoil 629 001